WWW.TAMILMIXEREDUCATION.COM

## கணிதவியல்

1. ₹ 35000 க்கு ஆண்டுக்கு 9% வட்டிவீதம் இரண்டு ஆண்டுகளுக்கான தனிவட்டி
(A) ₹ 5800 (B) ₹ 6300 (C) ₹ 6800 (D) ₹ 7000

2. மாறன் ஒரு வங்கியிலிருந்து, ஆண்டுக்கு 12% வட்டிவீதம் ₹ 6000 ஐ 7 ஆண்டுகளுக்குக் கடனாகப் பெற்றார் எனில், 7 ஆண்டுகள் கழித்து அவர் எவ்வளவு பணத்தைச் செலுத்தினால் கடன் தீரும்?
(A) ₹ 4200 (B) ₹ 10200 (C) ₹ 5040 (D) ₹ 11040

3. கடனாக வழங்கப்பட்ட அசல் ₹ 46900க்கு 2 ஆண்டுகளுக்குப் பின் தனிவட்டி மூலம் பெறப்பட்ட மொத்தத்தொகை ₹ 53466 எனில், வட்டிவீதம்
(A) 7% (B) 8% (C) 10% (D) 12%

4. அதியன் என்பவர் மகிழுந்து வாங்குவதற்காக ₹ 15000 ஐ 10% தனிவட்டி என்ற வீதத்தில் கடனாகப் பெற்றார். அவர் ₹ 9000 ஐக் கடனை முடிக்கும் தருவாயில் வட்டியாகச் செலுத்தினார் எனில், கடனைப் பயன்படுத்திய காலம்
(A) $3\frac{1}{2}$ ஆண்டுகள் (B) 4 ஆண்டுகள்
(C) $5\frac{1}{2}$ ஆண்டுகள் (D) 6 ஆண்டுகள்

5. ஓர் அசலின் மீதான வட்டி இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை கணக்கிடப்பட்டால், ஓராண்டிற்கு எத்தனை மாற்றுக் காலங்கள் இருக்கும்
(A) 2 (B) 4 (C) 6 (D) 12

6. ஆண்டுக்கு ஒருமுறை வட்டிக் கணக்கிடும் முறையில் ₹ 5000 இக்கு 12% ஆண்டு வட்டியில் 2 ஆண்டுகளுக்கான கூட்டுவட்டி
(A) ₹ 1046 (B) ₹ 1272 (C) ₹ 1326 (D) ₹ 1874

7. ₹ 8000க்கு 10% ஆண்டு வட்டிவீதம், அரையாண்டுக்கு ஒருமுறை வட்டிக் கணக்கிடும் முறையில் ஓர் ஆண்டுக்கு கிடைக்கும் கூட்டுவட்டி
(A) ₹ 820 (B) ₹ 800 (C) ₹ 1600 (D) ₹ 1680

### விளக்கம்

1. விடை : (B)
P = ₹ 35000, R = 9%, N = 2 ஆண்டுகள்
$\therefore$ தனிவட்டி $S.I = \frac{PNR}{100}$
$= \frac{35000 \times 2 \times 9}{100} \Rightarrow$ ₹ 6300

2. விடை : (D)
P = ₹ 6000, R = 12%, N = 7 ஆண்டுகள்
$\therefore$ தனிவட்டி $S.I = \frac{PNR}{100}$
$= \frac{6000 \times 7 \times 12}{100} \Rightarrow S.I = 5040$
$\therefore$ தொகை $A = P + S.I$
$= 6000 + 5040 \Rightarrow A =$ ₹ 11040

3. விடை : (A)
P = ₹ 46900, N = 2 ஆண்டுகள், A = ₹ 53466
$\therefore$ தனிவட்டி $S.I = 53466 - 46900$
S.I = ₹ 6566
$\therefore$ வட்டிவீதம் $R = \frac{S.I \times 100}{PN}$
$= \frac{6566 \times 100}{46900 \times 2} \Rightarrow R = 7\%$

4. விடை : (D)
P = ₹ 15000, R = 10%, S.I = ₹ 9000
$\therefore$ காலம் $N = \frac{S.I \times 100}{PR}$
$= \frac{9000 \times 100}{15000 \times 10} \Rightarrow N = 6$ ஆண்டுகள்

5. விடை : (C)

6. விடை : (B)
P = ₹ 5000, r = 12%, n = 2 ஆண்டுகள்
$A = P\left(1 + \frac{r}{100}\right)^n$
$= 5000\left(1 + \frac{12}{100}\right)^2$
$= 5000 \times \frac{112}{100} \times \frac{112}{100} \Rightarrow A = 6272$
$\therefore$ கூட்டுவட்டி $C.I = A - P$
$= 6272 - 5000 \Rightarrow$ ₹ 1272

7. விடை: (A)
P = ₹ 8000, r = 10%, n = 1 ஆண்டு
$A = P\left(1 + \frac{r}{200}\right)^{2n} = 8000\left(1 + \frac{10}{200}\right)^{2 \times 1}$
$= 8000\left(1 + \frac{1}{20}\right)^2 = 8000 \times \frac{21}{20} \times \frac{21}{20} \Rightarrow A =$ ₹ 8820
$\therefore$ கூட்டுவட்டி $C.I = A - P$
$= 8820 - 8000 \Rightarrow$ ₹ 820

256 பக்கம் ரூ. 300
TNPSC Group-IV & VAO
தேர்வு வழிகாட்டி புத்தகம் பெற
1800 425 7700 ( Toll Free ) 75500 09565 ( Whatsapp ) ( காலை 7:00 - இரவு 7:00 மணி )